வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No.: P.1632

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

விலை ரூ. 30/=

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 18.11.2025 செவ்வாய்க்கிழமை இதழ் : 322 பக்கங்கள் : 08

## உயிரிழந்தோர் நினைவு என்ற பெயரில் புலிகளை யாரும் நினைவு கூரமுடியாது

கொழும்பு, நவ. 18

போரில் உயிரிழந்தவர்களை நினைவு கூருவதற்குரிய உரிமை மக்களுக்கு இருப்பதாக சபை முதல்வரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க அமைச்சர் பிமல் ரத்நாயக்க திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

எனினும், அந்த உரிமையென்பது விடுதலைப் புலிகளை நினைவு கூருவதற்கானது அல்ல எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நினைவேந்தல் நடத்துவதற்கு 2024 நவம்பரில் இடமளிக்கப்பட்டது. 2025 நவம்பரிலும்

07

## புத்தர் சிலை விவகாரத்தில் பொலிஸ் தலையிட்டது ஏன்?

### பாராளுமன்றத்தில் சஜித் கேள்வி

கொழும்பு, நவம்பர் 18

**திருகோணமலையில் உள்ள சிறீ சம்புத்த ஜெயந்தி போதிராஜ விகாரையில் நேற்று (நேற்று முன்தினம்) ஏற்பட்ட பதற்றமான சூழ்நிலையில் பொலிஸார் தலையிட்டது குறித்து எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பினார். இது வகுப்புவாத பதற்றங்களைத் தூண்டும் என்றும் அவர் எச்சரித்தார்.**



பௌத்த மதத்துக்கு அனைவரும் முன்னுரிமை அளியுங்கள் என்றும் அவர் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

புத்த மதத்துக்கு முதன்மையான இடத்தை வழங்கும் அதேவேளையில், பிற மதங்களுக்கு மரியாதை அளிப்பதை உறுதி செய்யும் அரசமைப்பின் இரண்டாம் அத்தியாயத்தை மேற்கோள் காட்டி, 1951 இல் நிறுவப்பட்டு 2010 இல் புத்த விவகாரத் துறையில் பதிவு செய்யப்பட்ட


07

## அகற்றப்பட்ட அதே இடத்தில் நேற்று மீண்டும் வைக்கப்பட்ட புத்தர் சிலை!

### திருமலையில் தொடர்கிறது பதற்ற நிலை

திருகோணமலை, நவ. 12

திருகோணமலை கடற்கரையை அண்டிய பகுதியில் புதிதாக புத்தர் சிலை வைக்கும் வைபவம் பெரும் பதற்றநிலைக்கு மத்தியில் நேற்று திங்கட்கிழமை பிற்பகல் 1.35 மணிக்கு பௌத்த சம்பிரதாய அடிப்படையில் இடம்பெற்றது. இதில் பெரும் எண்ணிக்கையான பிக்குகள் பங்கேற்றனர். நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு அவசர அவசரமாக தற்காலிக கட்டடம் அமைத்து புத்தர் சிலை கொண்டு வந்து வைக்க முற்பட்ட



போது ஏற்பட்ட அமைதியின்மை காரணமாக மீண்டும் புத்தர் சிலை கொண்டு செல்லப்பட்டு நேற்று மீண்டும்

07

## 31 இந்திய மீனவர்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை

யாழ்ப்பாணம், நவ. 18

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபட்ட 31 தமிழக கடற்றொழிலாளர்களுக்கு 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை கடற்பரப்பை அண்டிய பகுதிகளில் கடந்த சில வாரங்களுக்கு முன்பாக மூன்று படகுகளில் அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மூன்று படகோட்டிகள் உள்ளிட்ட 31 பேரை கடற்படையினர் கைது செய்து , நீரியல்வளத்துறை அதிகாரிகள் ஊடாக

07

## பாதாள உலக குழுக்கள் வலுவூட்டப்படுகின்றன!

### நாமல் ராஜபக்ஷ குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 18

அரசாங்கம் வலுவூட்டும் பாதாளக் குழுக்கள் சுதந்திரமாக செயற்பட இடமளிக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- மக்கள் விடுதலை முன்னணியினருடன்

07

## ஜனாதிபதி- தமிழ் அரசு வியாழனன்று சந்திப்பு

கொழும்பு, நவ. 18

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியினருக்கும் இடையில் நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்குக் கொழும்பில் ஜனாதிபதி செயலகத்தில் நேரடிப் பேச்சு நடைபெறவுள்ளது.

தம்முடன் பேச்சுக்கு நேரம் ஒதுக்கித் தருமாறு தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் மற்றும் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர்

07

## திருகோணமலை புத்தர் சிலை குறித்து உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்!

### அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார

கொழும்பு, நவ. 18

திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் குறித்து உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இந்த நாட்டில் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு பிறிதொரு சட்டம் கிடையாது. அதேபோல் பௌத்த துறவிகளுக்கு என்றும் பிறிதொரு சட்டம் கிடையாது. அனைவரும் பொது சட்டத்துக்கு கட்டுப்பட வேண்டும் என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் வெளிவிவகாரம் மற்றும் நீதிய மைச்சுக்கான குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன் னம்பலம்

07

## நம்பி வாக்களித்த தமிழ் மக்களுக்கு முழுத்துரோகம் இழைத்துள்ளீர்கள்!

### அநுர அரசை சபையில் சாடினார் கஜேந்திரகுமார்

யாழ்ப்பாணம், நவ. 18

"உங்களை நம்பி, நீங்கள் சொன்னதை எல்லாம் நம்பி உங்களுக்கு வாக்களித்த தமிழ் மக்களுக்கு நீங்கள் முழுமையான துரோகத்தை இழைத்திருக்கிறீர்கள்" என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

நீதி அமைச்சு மீதான விவாதத்தின்போது, திருகோணமலை சட்டவிரோத விகாரை அமைப்பு குறித்து நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- திருமலையில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட புத்தர் சிலையை

07

## ஷேக் ஹசீனாவுக்கு மரண தண்டனை!

டாக்கா, நவ. 18

பங்களாதேஷின் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு அவரது அரசாங்கம் கடந்த ஆண்டு மாணவர் தலைமையிலான போராட்டங்களை வன்முறையாக ஒடுக்கியதில் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களை செய்ததாக கூறி,

07

## ஆளுங்கட்சி தமிழ் எம்.பிக்கள் உடனே பதவி விலகவேண்டும்!

### சுமந்திரன் வலியுறுத்து

கொழும்பு, நவ. 18

"தேசிய மக்கள் சக்தி அரசும் முன்னைய அரசுகளைப் போலவே ஒரு இனவாத, சிங்கள பௌத்த பேரினவாத அரசு என்பதை நிறுவியுள்ளது. எனவே, பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்திரா உட்பட அக்கட்சியிலுள்ள அனைத்து தமிழ் உறுப்பினர்களும் உடன் பதவி விலக வேண்டும்" -இவ்வாறு இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் தனது முகநூல் பக்கத்தில்

07

## வடக்கில் மழை குறைவடையும்!

யாழ்ப்பாணம், நவ. 18

வடக்கு மாகாணத்தில் நேற்று இரவு முதல் மழை படிப்படியாக குறைவடையும். ஆனாலும் இன்றும் ஒரு சில இடங்களில் கன மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது என யாழ்.பல்கலைக்கழக புவியியல் துறைத் தலைவர் பேராசிரியர் நா. பிரதீபராஜா

07

## ஹசீஸ் போதைப்பொருளுடன் மருத்துவபீட மாணவன் கைது

### யாழ்.குற்றத் தடுப்பு பொலிஸ் அதிரடி

யாழ்ப்பாணம், நவ. 18

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட இரண்டாம் வருடத்தில் கல்வி பயிலும் மாணவர் ஒருவர் ஹசீஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்.குற்றத் தடுப்புப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் யாழ்.பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட இரண்டாம் வருடத்தில் கல்வி

07



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிதம்பரம் பகுதியில் மக்களின் காணிகளை கையகப்படுத்தும் வனவளத் திணைக்களம்

வவுனியா, நவ. 18

வவுனியா கள்ளிக்குளம் சிதம்பரம் பகுதியில் மக்களின் நெற் காணிகளை வனவளத் திணைக்களம் கையகப்படுத்தியுள்ளதுடன், நெற் பயிரை சேதப்படுத்தி தேக்கு மரம் நாட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக குற்றம்சாட்டியுள்ளனர்.

இது தொடர்பாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கையில்-


நாங்கள் பூர்வீகமாக குறித்த காணிகளில் பயிர் செய்து வந்த நிலையில் கடந்த 1987 ஆம் ஆண்டு ஏற்பட்ட போரினால் இடம்பெயர்ந்திருந்தோம். மீண்டும் 2012 ஆம் ஆண்டு மீள்குடியமர்த்தப்பட்டதுடன் எமது காணிகளில் நெற் பயிர்ச் செய்கைகளில் ஈடுபட்டு வருகிறோம்.

தற்போது 13 ஆண்டுகளின் பின் வனவளப் பிரிவு உத்தியோகத்தர்கள் எமது காணிகளை கையகப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதுடன், அங்கு விதைக்கப்பட்டுள்ள பயிர்களை அழித்து தேக்கு மரம் நாட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

அவர்களது உழவு இயந்திரங்களை விவசாய பயிர்களுக்கு மேலாக ஓட்டிச்சென்று பயிர்களை சேதப்படுத்தி வருகின்றனர். இதனால் எமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. குறித்த காணியை பதிவு செய்ததற்கான ஆவணமும் எங்களிடம் இருக்கிறது.

எனவே வனவளத் திணைக்களத்தின் நடவடிக்கையை தடுத்து நிறுத்தி எமது பூர்வீக காணிகளை மீளவும் பெற்றுத் தரவேண்டும்-என்றார். (அ)

# பருத்தித்துறை நகர சபைக்கு எதிராக கொட்டடி மக்கள் நேற்று போராட்டம்



வடமராட்சி, நவ. 18

வடமராட்சி பருத்தித்துறை நகரசபைக்கு எதிராக பருத்தித்துறை கொட்டடி மக்கள் போராட்டம் ஒன்றை நேற்றுக் காலை முன்னெடுத்தனர்.

கொட்டடி மீனவர்களின் படகு தரிப்பிடத்துக்காக தூர் வாரப்பட்ட மண்ணை இது வரை அகற்றிவில்லை என தெரிவித்தே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் குறித்த மண்ணை அகற்றுமாறு கோரி தவிசாளரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இதற்கு பதிலளித்த தவிசாளர், உடனடியாக மணல் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார். (அ-08-02)

# அளம்பில் துயிலும் இல்லத்தில் சிரமதானப் பணிகள் ஆரம்பம்



முல்லைத்தீவு, நவ. 18

முல்லைத்தீவு மாவட்டத்தின் அளம்பில் மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகளை அனுஷ்டிப்பதற்கான சிரமதான பணிகள் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

மாவீரர்களுக்கு பொதுச்சுடர் ஏற்றப்பட்டு மலர் வணக்கம் செலுத்தப்பட்டதை தொடர்ந்து சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

அந்த வகையில் அண்டிய அயல் கிராமங்களில் உள்ள மக்கள் மாவீரர்களின் பெற்றோர், உரித்துடையோர் அனைவரையும் குறித்த சிரமதானப் பணிக்கு வருகை தந்து ஒத்துழைப்பு வழங்குமாறும் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகளில் அனைத்து உறவுகளையும் கலந்து கொள்ளுமாறும் பணிக்குழுவினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# கசிப்பு வியாபாரி கைது!

யாழ்ப்பாணம், நவ. 18

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணியில் பல வருடங்களாக கசிப்பு தொழிலை மேற்கொண்டு வந்த வெற்றிலைக்கேணி பகுதியை சேர்ந்த கசிப்பு வியாபாரி ஒருவர் மருதங்கேணி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்

வெற்றிலைக்கேணி சுடலையடி பகுதியில் மறைமுகமாக கசிப்பு வியாபாரம் மேற்கொண்டிருந்தவேளை மருதங்கேணி பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டு நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டார். (அ)

# பெண்கள் வாழ்வுரிமை சங்கத்தின் கலாசார நிகழ்வு வடமராட்சியில்!

யாழ்ப்பாணம், நவ. 18

பெண்கள் வாழ்வுரிமை சங்கத்தின் யாழ். வடமராட்சி கிழக்கு பிரதேச பிரிவுக்கு உட்பட்ட பெண்களுக்கான கலாசார நிகழ்வும் சான்றிதழ் வழங்கும் வைபவம் நேற்று வடமராட்சி கிழக்கு கலாசார மண்டபத்தில் முற்பகல் 10:30 மணியளவில் ஆரம்பமானது.

இந்த நிகழ்வின் ஆரம்பத்தில் விருந்தினர்கள் மலர்க்கொத்து கொடுத்து அழைத்து வரப்பட்டனர். தொடர்ந்து விருந்தினர்களால் மங்கள விளக்கேற்றி வைக்கப்பட்டு, வரவேற்பு நடனம் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகள் மிகவும் சிறப்பாக இடம்பெற்றன.

பின்னர் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இச் சான்றிதழ்கள், பெண்கள் சம்பந்தமான அடிப்படை சட்ட உரிமைகள் தொடர்பாக பயிற்சியூட்டப்பட்ட பெண்களுக்கு வழங்கப்பட்டன. அதனை தொடர்ந்து விருந்தினர்களுக்கான நினைவுச்சின்னங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் சிவலிங்கம் உஷாவும், சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் ரோகிணி மற்றும் பெண்கள் வாழ்வுரிமைச் சங்கத்தின் இணைப்பாளர் வாசுகி வல்லிபுரமும் கலந்துகொண்டதுடன், மருதங்கேணி கிராம நிர்வாக அலுவலர், பொருளாதார உத்தியோகத்தர் மற்றும் பெண்கள் வாழ்வுரிமை சங்கத்தின் உறுப்பினர்கள் உத்தியோகத்தர்கள் மற்றும் பெண்கள் சிறுவர்கள் என பலரும் பங்கேற்றனர். (அ-05)

# தேங்காய் விற்பனை வீழ்ச்சி

கொழும்பு, நவ. 18

நாட்டில் தேங்காய் விற்பனையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெங்கு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, வாராந்த தேங்காய் ஏல விற்பனையில், 0.12 சதவீதம் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகக் கூறியுள்ளது.

தேங்காய் ஒன்றின் விலை 200 ரூபாய் வரை ஏற்பட்டுள்ள அதிகரிப்பே இந்த வீழ்ச்சிக்கு காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ)

# ஹாட்லியின் மைந்தர்களின் 26ஆம் ஆண்டு நினைவுதினம் இன்பர்சிட்டி கடற்கரையில்!

யாழ்ப்பாணம், நவ. 18

வடமராட்சி - பருத்தித்துறை ஹாட்லியின் மைந்தர்களின் 26 ஆம் ஆண்டு நினைவு நாள் வடமராட்சி இன்பர்சிட்டி கடற்கரையில் அவர்களது குடும்பத்தவர் மற்றும் நண்பர்களால் நேற்று நினைவு கூரப்பட்டது.

கல்விச் செயற்பாட்டின் நிமித்தம் வடமராட்சி இன்பர்சிட்டி கடற்கரைப் பகுதியில் 1999ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் திகதி, கடல்வள ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தவேளை கடல் அலையில் சிக்குண்டு உயிரிழந்திருந்த யாழ். ஹாட்லி கல்லூரியின் 2000ஆம் ஆண்டு உயர்தர வகுப்பு மாணவர்கள் நான்கு பேரின், 26ஆவது ஆண்டு, மற்றும் பேராதனை பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீட மாணவனாக கல்வி கற்றுவந்தவேளை ரயில் விபத்தில் சிக்கி உயிரிழந்த மாணவனின் 21ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று காலை வடமராட்சி இன்பர்சிட்டி கடற்கரையில் இடம்பெற்றது.

குறித்த மாணவர்களது திருவுருவப்படம் வைக்கப்பட்டு உணவு வகைகள் படையலிட்டு மேற்கொள்ளப்பட்ட நினைவேந்தல் நிகழ்வில், ஹாட்லி கல்லூரி முன்னாள் அதிபர் தம்பையா கலைச்செல்வன், மாணவர்களின் குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் மலர்தூவி, சுடரேற்றி அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

இறுதியில் படையல் பொருட்கள் மற்றும் மாலை, பூக்கள் என்பன மாணவர்களின் ஆன்மா இரண்டறக் கலந்திருக்கும் இன்பர்சிட்டி கடலில் கலக்கப்பட்டது. (அ)


# யாழில் வீதிக்கு குறுக்கே முறிந்து விழுந்த மரத்தினால் தடைப்பட்டது போக்குவரத்து!

யாழ்ப்பாணம், நவ. 18

மழையுடன் வீசிய காற்று காரணமாக யாழ்ப்பாணம் - சுழிபுரம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு மரம் ஒன்று வீதிக்கு குறுக்கே முறிந்து விழுந்ததில் போக்குவரத்து முற்றாக தடைப்பட்டது. இதனால் மின்கம்பமும் முறிந்ததால் மின் தடையும் ஏற்பட்டது.

அத்துடன் அராலிப் பகுதியில் 5 வீடுகளுக்குள் வெள்ளமும் புகுந்துள்ளது. இந்நிலையில் விரைந்து செயல்பட்ட வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் ச.ஜெயந்தன் தலைமையிலான குழுவினர், வீதிக்கு குறுக்காக முறிந்து விழுந்த மரத்தை வெட்டி போக்குவரத்தை சீர்ப்படுத்தினர்.

அத்துடன் அராலி பகுதியில் வீடுகளுக்குள் புகுந்த



வெள்ள நீரை வெளியேற்றும் பணியிலும் அந்த குழுவினர் ஈடுபட்டனர். பாதிக்கப்பட்ட குடும்பங்கள் பொது இடம் ஒன்றில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டதாக வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் ஜெயந்தன் தெரிவித்தார்.

# சஜித் அணியின் பிரதேச சபை உறுப்பினர் கஞ்சாவுடன் கைது

கொழும்பு, நவ. 18

பதுளை, பல்லேவத்த பிரதேசத்தில் கஞ்சா போதைப் பொருளுடன் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் கந்தகெட்டிய பிரதேச சபையில் ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், சந்தேகநபர் பிரதேச சபை உறுப்பினராக இருப்பதுடன், ஹாபத்கமுவ மின்சார வேலி பாதுகாப்பு உத்தியோகத்தராகவும் கடமையாற்றுவதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
18.11.2025 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம், கார்த்திகை 02

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

தொலைபேசி : 021 205 2300

# திருமலை புத்தர் சிலை விவகாரம்

திருகோணமலை கடற்கரைக்கு அருகில் வைக்கப்பட்ட புத்தர் சிலை இரவில் அகற்றப்பட்டு காலையில் சட்டபூர்வமாக வைக்கப்பட்டிருக்கின்றது. பௌத்த கட்டமைப்புகளுக்கு முன்னால் தலை தாழ்த்தும் நிலையில் மாற்றம் என்பது எப்போதுமில்லை என்பதை தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் நிரூபித்தது. இதுவரையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தொடர்பில் நிலவிய சந்தேகங்கள் முடிவுக்கு வந்தன. பண்டாரநாயக்கா காலத்திலிருந்து வாழையடிவாழையாக தொடரும் தென்னிலங்கை அரசியலில்தான் அனைத்துக் கட்சிகளும் இருக்கின்றன என்பதைப் புரிந்துகொள்வதற்கும் இது ஒரு சிறந்த உதாரணமாக இருந்தது.

பண்டா - செல்வா உடன்பாட்டை எதிர்த்து ஜே. ஆர். ஜெயவர்த்தன பாதை யாத்திரை சென்றார். அதனைக் காரணம் காண்பித்து ஒப்பந்தம் கிழித்து வீசப்பட்டது. பதற்றங்களை தடுப்பது என்னும் அடிப்படையில் சிலையை அகற்றுமாறு பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டது. பொலிஸாரும் துணிவாக அகற்றினர். ஆனால், மறுதினமே குறித்த இடத்தில் சிலையை வைப்பதற்கு அதே பொலிஸாரே பாதுகாப்பு வழங்கும் நிலைமை ஏற்படுத்தப்பட்டிருகின்றது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்தார்.

இதனை எப்படிச் செய்யலாம், இதனை செய்வதற்கான அதிகாரத்தைத் தந்தது யார் - பௌத்தத்துக்கு முன்னுரிமை அளியுங்கள் என்றார். மறுகணமே அரசாங்கம் இறங்கியது. இதுதான் தென்னிலங்கையின் வாழையடிவாழை அரசியல். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களிக்குமாறு தமிழ் அரசுக் கட்சி கோரியது.

பிரேமதாஸவோ ஆகக்குறைந்த நன்றியுணர்வுகூட, இல்லாமல் நீங்கள் எப்படி சிலையை அகற்றலாம் என்று அரசாங்கத்தை நோக்கிக் கேட்கிறார். இந்த விடயத்தில் அரசாங்கத்தை மட்டுமே தமிழர் தரப்புகள் நோக்குகின்றன. அது வசதியான அணுகுமுறை. ஆனால், தென்னிலங்கையில் அனைத்துக் கட்சிகளுமே அவ்வாறுதான் இருக்கின்றன என்பதையே தமிழ் கட்சிகள் உற்றுநோக்கவேண்டும்.

இன்று புத்தர் சிலை விடயத்தில் என்ன நடந்ததோ, அதுதான் அரசியல் தீர்வு விடயத்திலும் நடக்கப் போகின்றது. மாகாண சபையையும் இல்லாமலாக்கும் வாய்ப்பு ஏற்பட்டால் தென்னிலங்கையில் அனைவருமே ஒத்துழைப்பு வழங்கினால் அதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. தமிழ் கட்சிகள் தங்களுக்குள் ஏன் ஒன்றுபடவேண்டும் என்பதை இனியாவது புரிந்துகொண்டால் நல்லது. இல்லாவிட்டால், "எல்லோம் எப்போதோ முடிந்துபோன காரியம்", என்று கூறிவிட்டு, வெறுமனே யாழ்ப்பாணத்துக்குள் சத்தம் போட்டுக் கொண்டிருப்பதே தமிழ் கட்சிகள் என்னும் நிலைமையே உருவாகும்.

இதேவேளை, அரசமைப்பிலுள்ள பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தும் விடயத்திலும் முன்னேற்றங்கள் ஏற்பட வாய்ப்பில்லை. காரணம் அதற்கான பலமான அழுத்தங்கள் இல்லை. இந்தநிலையில் தற்போதைய சூழலில் அனைத்துக் கட்சிகளும் ஒன்றுபடுவது முதல் தேவை, பின்னர், மாகாண சபைத் தேர்தலுக்காக அனைத்துக் கட்சிகளும் ஒரு வேலைத்திட்டத்துக்குள் வரவேண்டியது அடுத்த நகர்வாக இருக்கவேண்டும். தமிழ் கட்சிகள் ஒன்றுபடாவிட்டால் அரசாங்கத்தின் வேலை இலகுவாகும்.

## வட மாகாண மர நடுகை மாதம் கார்த்திகை - 2025

ஒரு மரத்தை நடவு செய்வது பிரபஞ்சத்தின் லயத்துடன் உங்களை இணைத்துக் கொள்வதற்கான எளிதான வழியாகும்."

- அமிற் றே (இந்திய ஆன்மீகக் குரு)



# ஜெயவர்தனபுர பல்கலை மாணவர்களுக்கு போதைப்பொருள் வழங்கிய இருவர் கைது

கொழும்பு, நவ. 18

பல்கலைக்கழகம் ஒன்றில் கல்வி பயிலும் மாணவர்களுக்குப் போதைப்பொருள் வழங்கிய குற்றச்சாட்டில் இருவரை நுகேகொடை வலய குற்றத்தடுப்புப் பிரிவு கைது செய்துள்ளது.

சிறீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் ஒரு சில மாணவர்களுக்கும், போதைப் பழக்கத்துக்கு அடிமையானவர்களுக்கும் அந்த இருநபர்களும் ஹெரோயின் போதைப்பொருளை வழங்க வந்துள்ளனர். அப்போதே இருவரும் 10 கிராம் 900 மில்லிகிராம் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டனர்.

சிறீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் உள்ள ஆண்கள் விடுதி அருகே சந்தேகத்திற்கிடமான முறையில் ஒருவர் நடமாடுவதாகக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், இந்த கைது நடவடிக்கை இடம் பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த நபரிடம் நடத்தப்பட்ட விசாரணையில், பல்கலைக்கழகத்துக்கு அருகில் உள்ள வீதியில் காத்திருந்த மற்றொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பல்கலைக்கழகத்திற்குள் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நீண்ட காலமாக பல்கலைக்கழக மாணவர்களுக்குப் போதைப்பொருட்களை வழங்கி வருபவர் என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ)

# வெளிநாடுகளில் தொழில்புரிவோருக்கு வசதி வழங்கும் வகையில் புதிய செயலி

கொழும்பு, நவ. 18

வெளிநாடுகளில் தொழில் புரிவோருக்கான வசதிகளை வழங்கும் நோக்குடன் புதிய செயலி ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் 40 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட நிகழ்வின்போது, இந்த செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், வெளிநாடுகளில் பணிபுரியும் தொழிலாளர் ஒருவர் உயிரிழந்தால், அவரின் குடும்பங்களுக்கு வழங்கப்படும் காப்புறுதி இழப்பீட்டுத் தொகையை 06 இலட்சம் ரூபாயிலிருந்து 20 இலட்சம் ரூபாய் வரை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், பயிற்றப்பட்ட வெளிநாட்டு தொழிலாளர்களை உருவாக்குவதே அரசாங்கத்தின் பொறுப்பு என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

பெறுமதியான, கேள்வித் தன்மை கூடிய மனித வளத்தை உருவாக்குவதும் அரசாங்கத்தின் கடமை என அவர் குறிப்பிட்டார். (அ)

# முழங்கால் நோயால் பாதிப்புற்றோருக்கு கண்டியில் இலவச மருத்துவ சிகிச்சைகள்

கொழும்பு, நவ. 18


முழங்கால் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கான இலவச மருத்துவ சிகிச்சைகளை வழங்க கண்டி தேசிய மருத்துவமனையின் நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தாய்லாந்தின் அனுசரணையில் இலவசமாக இந்த மருத்துவ முகாம் நடத்தப்படுவதாக, கண்டி தேசிய மருத்துவமனையின் பணிப்பாளர் இரேஷா பெர்ணான்டோ தெரிவித்தார்.


நேற்று முன்தினம் முதல் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை இந்த இலவச சிகிச்சைகள் வழங்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

குறைந்த வருமானம் கொண்ட வறிய மக்களுக்காக இந்த இலவசமாக இந்த சிகிச்சை வழங்கப்படுகிறது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். தாயார் ஆதரித்துப் பேசுவார். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. உத்தியோகத்தில் ஊழியர்கள் உதவுவார்கள். திறமைகள் வெளிப்படும்

**இடபம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள் நண்பர்களின் வருகையால் வீடு களைக்கட்டும். உத்தியோகத்தில் உயரதிகாரிசில சூட்சுமங்களை சொல்லித் தருவார். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**மிதுனம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். உங்களை சுற்றியிருப்பவர்களில் வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள்.

**கடகம்**
பால்ய நண்பர்களை சந்திப்பீர்கள். எதிர்மறை எண்ணங்கள் விலகும். தாயாரின் உடல் நலத்தில் கவனம் தேவை. அலுவலகத்தில் அமைதி நிலவும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**சிம்மம்**
கம்பீரமாக பேசி சில காரியங்களை முடிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். தலைமைக்கு நெருக்கமாவீர்கள். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**கன்னி**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்குழப்பம் நீங்கி எதிலும் ஒரு தெளிவு பிறக்கும். விருந்தினர் வருகை அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஆதரிப்பார். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் ஒரே முயற்சியில் முடிய வேண்டிய விஷயங்களை பல முறை அலைந்து முடிப்பீர்கள். கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. சகிப்புத் தன்மை தேவைப்படும் நாள்.

**விருட்சிகம்**
எதையும் திட்டமிட்டு செய்யப் பாருங்கள். உறவினர்கள் நண்பர்கள் சிலர் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். சக ஊழியர்களிடம் விவாதம் வேண்டாம்.

**தனுசு**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் பாராட்டப்படுவீர்கள்.

**மகரம்**
குடும்ப கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். சொந்த பந்தங்கள் வீடு தேடி வருவார்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும்.

**கும்பம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். வியாபாரத்தில் வேலையாட்களின் தொந்தரவு குறையும். புது வாய்ப்புகள் வரும். தடைப்பட்ட வேலைகள் முடியும்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உணர்ச்சிவசப்படாமல் இருங்கள். சில விஷயங்களுக்கு அனுபவ அறிவை பயன்படுத்துவது நல்லது. மறைமுக விமர்சனங்கள் உண்டு. பொறுமைத் தேவைப்படும் நாள்.

# வவுனியா தேசிய கல்வியற் கல்லூரியில் சுகாதார பரிசோதகர்கள் திடீர் சோதனை

வவுனியா, நவ. 18

வவுனியா தேசிய கல்வியற் கல்லூரியில் நேற்று முன்தினம் சுகாதார பரிசோதகர்கள் திடீர் சோதனை மேற்கொண்டுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வவுனியா தேசிய கல்வியற் கல்லூரியில் கல்வி கற்கும் ஆசிரிய மாணவர்கள் சிலர் வவுனியா மருத்துவமனையில் திடீர் சுகவீனம் காரணமாக சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

மாணவர்கள் பலர் ஒரே மாதிரி திடீர் சுகவீனம் அடைந்தமைக்கான காரணங்களை அறியும் பொருட்டு தேசிய கல்வியற் கல்லூரியில் சோதனை நடத்தப்பட்டது. பாதிக்கப்பட்ட ஆசிரிய மாணவர்களுடனும் கலந்துரையாடப்பட்டிருந்தது

இதன்போது, வவுனியா தேசிய கல்வியற் கல்லூரியில் விநியோகிக்கப்படும் குடிநீரும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன் உணவின் தரம் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன் சுகாதார சீர்கேடாக காணப்படும் பகுதிகளை சீர் செய்வதற்கும் சுகாதார பரிசோதகர்கள் அறிவுறுத்தினர். ஆசிரிய மாணவர்கள் திடீர் சுகவீனமுற்றமைக்கான காரணம் இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை எனவும் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வவுனியா தேசிய கல்வியற் கல்லூரியைச் சேர்ந்த சுமார் 40 வரையான ஆசிரிய மாணவர்கள் திடீர் சுகவீனம் காரணமாக அண்மையில் பாதிப்படைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-10)

# வெள்ளத்தில் மிதக்கும் பளை பொதுச்சந்தை

கிளிநொச்சி, நவ. 18


பளை பொதுச் சந்தையில் கனமழை காரணமாக அதிக வெள்ளம் தேங்கி சந்தை நிலப் பரப்பு முழுவதும் வெள்ளத்தில் மூழ்கி காணப்படுகின்றது.

பச்சிளைப்பள்ளி மக்கள் தமது அன்றாட தேவைகளை பூர்த்தி செய்வதற்காக தினமும் இந்த பொதுச்சந்தையில் மரக்கறி மற்றும் கடல் உணவு உள்ளிட்டவற்றை வாங்கிச் செல்வது வழக்கம்.

இந்த நிலையில், மக்கள் தமது அன்றாட தேவைகளை பூர்த்தி செய்வதற்கு மிகவும் நெருக்கடியை எதிர்நோக்கி வருகின்றனர். பொதுச் சந்தை சுற்றுச்சூழல் முழுவதும் வெள்ளம் வியாபித்து காணப்படுவதால் தமது பயண ஒழுங்குகளையும் தமது வர்த்தக செயல்பாடுகளையும் மேற்கொள்வதற்கு வெள்ளம் இடையூறாக இருப்பதாகவும் பல தொற்று நோய்கள் ஏற்படும் வாய்ப்புகள் உள்ளதாகவும் பச்சிளைப்பள்ளி மக்கள் தமது விசனம் வெளியிட்டுள்ளனர்.

பச்சிளைப்பள்ளி பொதுச்சந்தையில் தற்போது புனரமைப்பு வேலைகள் இடம்பெறுவதோடு ஆங்காங்கே கட்டட பொருட்கள் குவித்த வண்ணமும் இருப்பதாகவும் இவ்வேளை திட்டங்களை மிக விரைவில் நிறைவு செய்து தருமாறும் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பல காலமாக தாம் இப் பிரச்னைக்கு முகம் கொடுப்பதாகவும் தமது பிரதேசத்தில் சிறிய அளவு மழை பெய்தாலும் பளை பொதுச் சந்தை காணப்படும் பிரதேசத்தில் வெள்ளம் சூழ்ந்து விடுவதாகவும் மக்கள் கூறினர். எனவே, வெள்ளத்தை வெளியேற்ற உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)



# சிறீ ஐயப்ப சுவாமி மஹா கும்பாபிஷேகம்

வவுனியா, நவ. 18

வவுனியா, தாண்டிக்குளம் அருள்மிகு அற்புத ஐயனார் ஆலய பரிவார சிறீ ஐயப்ப சுவாமி மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

வேதாகம கிரியா கலாநிதி சிவசிறீ முத்துஜெயந்திநாதக் குருக்கள் மற்றும் குருமார்களின் வேதபாராயணம் ஒலிக்க பிள்ளையார், முருகன், ஐயப்பன், கருப்புசாமி, கடுத்தசாமிகளின் சிலைகளை உள்வீதி வலம் கொண்டு வந்து அபிஷேகம் நடைபெற்றது.

அத்தோடு, ஐயப்ப சுவாமிக்கு விசேட பூஜையும் பஜனையும் நடைபெற்றது. (எ-10)

# ஒட்டுசுட்டானில் வீட்டுக்குள் புகுந்த பாம்பு

முல்லைத்தீவு, நவ. 18

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் விளாத்திக்குளம் கிராமத்தில் நேற்று முன்தினம் வீடு ஒன்றுக்குள் வெங்கிணாந்தி பாம்பு புகுந்துள்ளது

இதனைத் தொடர்ந்து வீட்டின் உரிமையாளர்கள் வனஜீவ ராசிகள் திணைக்களத்துக்கு தகவல் கொடுத்தனர்.

குறித்த பகுதிக்கு விரைந்த முல்லைத்தீவு மாவட்ட வனஜீவராசிகள் திணைக்களத்தினர் பாம்பை பிடித்தனர்.

8 அடி நீளம் கொண்ட பாம்பை பிடித்த வனஜீவராசிகள் திணைக்களத்தினர் அதனை முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள வவுனிக்குளம் சரணாலயத்தில் விட்டனர். (எ)

# யாழில் பணியாற்றிய கான்ஸ்டபிள் ஹெரோயின் போதையுடன் கைது!

வெலிகந்த, நவ. 18

யாழ்ப்பாணம் பகுதியில் பணியாற்றிய பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் மற்றும் இன்னு மொரு நபர் ஹெரோயின் போதைப் பொருளுடன் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டதாக வெலிகந்த பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரான கான்ஸ்டபிள், கடந்த ஜனவரி மாதம் 8 ஆம் திகதி அன்று விடுமுறைக்கு திரும்பிய நிலையில் அதற்கு பின்னர் பணிக்கு வராததற்காக ஏப்ரல் 21 ஆம் திகதி பணிநீக்கம் உத்தரவு பெற்றுள்ளார்.

அவரிடமிருந்து பொலிஸ் துறையால் வழங்கப்பட்ட அதிகாரபூர்வ அடையாள அட்டையை கண்டுபிடிக்க முடிந்ததாகவும் வெலிகந்த பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# பருத்தித்துறை, மந்திகை மருத்துவமனையில் உடைந்த நிலையில் நோயாளர் இருக்கைகள்

பருத்தித்துறை, நவ. 18

பருத்தித்துறை, மந்திகை மருத்துவமனையில் நோயாளர் இருக்கைகள் உடைந்த நிலையில் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

பல நாட்களாக குறித்த இருக்கைகள் சரி செய்யப்படாமல் உடைந்த நிலையில் காணப்படுவதால் நோயாளிகள் சிரமத்துக்குள்ளாவதை அவதானிக்க முடிகின்றது

அதிகளவானோர் இருக்கைகள் இன்றி, பல மணி நேரம் காத்து நின்று மருத்துவ தேவைகளை நிறைவேற்றிச் செல்வதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது

பல நாட்களாக கேட்பாரற்று உடைந்த நிலையில் காணப்படும் மந்திகை மருத்துவமனையின் நோயாளர் இருக்கைகளை சீர் செய்யுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலின் வெளிநாட்டு விஜயங்கள் அரசுக்கு ரூ. 1007 மில்லியன் செலவு!

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தகவல்

கொழும்பு, நவ. 18

**முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலத்தில் 22 மாதங்களில் 24 வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டுள்ளதுடன் அதற்காக 1007.346 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதாக ஆளும் கட்சியின் பிரதம கொரடா அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.**



அந்த வகையில் தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க கடந்த ஒரு வருட காலத்தில் மேற்கொண்ட 8 வெளிநாட்டுப் பயணங்களுக்காக 14.9 மில்லியன் ரூபா மாத்திரமே செலவாகியுள்ளது என்றும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த காலங்களில் ஜனாதிபதிகளின் வெளிநாட்டுப் பயணங்களின்போது பெருமளவில் நிதி செலவிடப்பட்டுள்ளது. அந்த செலவுகள் தற்போதைய ஜனாதிபதியினால் குறைக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில், ரணில் விக்கிரமசிங்க 2022இல் நான்கு வெளிநாட்டு சுற்றுப் பயணங்களை மேற்கொண்டுள்ளார். அதன்போது 64 பேர் அவருடன் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். அதற்காக 129.31 மில்லியன் ரூபா செலவாகியுள்ளது.

2023இல் 16 வெளிநாட்டுப் பயணங்களை அவர் மேற்கொண்டுள்ளார். அதன்போது 269 பேர் அவருடன் சென்றுள்ளனர். அதற்காக 577.9 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது.

அத்துடன் 2024இல் 5 பயணங்களை அவர் மேற்கொண்டுள்ளதுடன் அதன்போது 115 பேர் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். அதற்காக 300 மில்லியன் ரூபா செலவாகியுள்ளது.

22 மாதங்களில் ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டுள்ள 24 வெளிநாட்டுப் பயணங்களுக்காக 385 பேர் அழைத்துச் செல்லப்பட்டுள்ளதுடன், மொத்தமாக 1007.346 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

ஆனால் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க 2024 டிசெம்பர் மாதத்திலிருந்து 2025 செப்ரெம்பர் மாதம் வரையில் 8 வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டுள்ளார். அவற்றுக்காக 14.9 மில்லியன் ரூபாவே செலவிடப்பட்டுள்ளது-என்றார். (அ)

# அரசுக்கு எதிராக அணி திரள நுகேகொடைக்கு வாருங்கள்!

## அழைக்கிறார் நாமல் ராஜபக்ஷ

கொழும்பு, நவ. 18

தேர்தல் காலத்தில் மக்களுக்கு வழங்கிய எந்த வாக்குறுதிகளையும் அரசாங்கம் நிறைவேற்றவில்லை. அரசாங்கத்துக்கு எதிரான அனைத்துக் கட்சிகளும் 21 ஆம் திகதி நுகேகொடைக்கு வந்து தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்குமாறு பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ அழைப்பு விடுத்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்று, விவசாயிகளுக்கு அளித்த வாக்குறுதிகளை அரசாங்கம் நிறைவேற்றவில்லை. உருளைக்கிழங்கு விவசாயிகள், பூசணி விவசாயிகள் மற்றும் வெங்காய விவசாயிகளுக்கு செய்யப்பட்ட அநீதிக்கு அந்த மக்கள் அரசாங்கத்தை வெளிப்படையாகக் குற்றம் சாட்டுகிறார்கள். இப்போது அந்த மக்கள் வீதிகளில் இறங்கினர்.



அரசாங்கம் பட்டதாரிகளுக்கு மிகப்பெரிய அநீதியைச் செய்துள்ளது. இந்த நாட்டு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை அரசாங்கத்தால் நிறைவேற்ற முடியவில்லை. இந்த அரசாங்கத்தின் பொய்யான குற்றச்சாட்டுகளுக்கு நாங்கள் பயப்படவில்லை.

அரசாங்கத்தின் பொய்யான வாக்குறுதிகளால் ஏமாற்றப்பட்ட அனைத்துக் கட்சிகளும் 21 ஆம் திகதி நுகேகொடையில் எங்களுடன் சேர்ந்து அரசாங்கத்திற்கு எதிராகப் போராட்டம் நடத்துமாறு கேட்டுக் கொள்கிறோம்-என்றார். (அ)

# வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு உரிய வேலை பெற்றுக்கொடுங்கள்

## எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை

கொழும்பு, நவ. 18

நாட்டில் கடுமையான ஆசிரியர் பற்றாக்குறையை எதிர்கொண்டிருந்த சமயத்தில், ஆசிரியர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பல ஆண்டுகளாக பல தியாகங்களை செய்து 41 இலட்சத்துக்கும் மேலான பாடசாலை பிள்ளைகளுக்கு கல்வியைப் புகட்டினர். 22,000 ஆசிரியர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இவ்வாறு இலவசக் கல்வியை வலுப்படுத்தினர். இன்று, இவர்களில் 16,600 பேர் காணப்படுகின்றனர். இந்த அரசாங்கம் எதிர்க்கட்சியில் இருந்த சமயம், தேர்தல் காலங்களில், இந்த ஆசிரியர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆசிரியர் சேவையில் நிரந்தரமாக இணைத்துக் கொள்வோம் என தீர்மானங்களை, வாக்குறுதிகளை மற்றும் உறுதிமொழிகளை வழங்கியது. ஆனால் இன்று இந்த வாக்குறுதிகள் இன்றுவரை நிறைவேற்றப்படவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஆசிரியர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் வேலையில்லாப் பட்டதாரிகள் நேற்று கொழும்பு ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் அமைதி வழியிலான போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். குறித்த ஆர்ப்பாட்ட இடத்துக்கு விஜயம் செய்து, அவர்களின் பிரச்னைகள் தொடர்பில் ஆராய்ந்த பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலயே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் இவ்வாறு கூறினார்.

எனவே, இந்த 16,600 பேருக்கும் ஆசிரியர் சேவையில் நிரந்தர நியமனத்தைப் பெற்றுக் கொடுங்கள். இது தொடர்பான மத்தியஸ்த தீர்மானத்தை அமுல்படுத்துங்கள். பல ஆண்டுகளாக கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதால், இந்த விடயத்தில் நாட்டுக்கு நகைச்சுவைகளை வழங்கிக் கொண்டிருக்காமல், உரிய நடவடிக்கை எடுத்து இவர்களை நிரந்தர தொழிலில் ஈடுபடுத்துங்கள். வாக்குறுதியளித்தபடி இவர்களுக்கு முறையான தொழில்களைப் மெற்றுக் கொடுங்கள் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். (அ)

# 3 வாகனங்கள் ஒன்றோடு ஒன்று மோதி விபத்து!

கொழும்பு, நவ. 18

வெள்ளவாய - தனமல்வில பிரதான வீதியில், தனமல்வில பொலிஸ் தலைமையகப் பிரிவுக்குட்பட்ட கித்துல்கோட்டை பிரதேசத்தில் நேற்று முற்பகல் மூன்று வாகனங்கள் ஒன்றோடு ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

இந்த விபத்தில் பஸ், வான் மற்றும் கார் ஆகியவை மோதுண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

விபத்தில் யாருக்கும் பாரிய சேதம் ஏற்படவில்லை என்றபோதிலும், வாகனங்களுக்கு கடுமையான சேதம் ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்து தொடர்பில் தனமல்வில பொலிஸ் தலைமையகம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது. (அ)

# 200 நிபுணர்களின் பரிந்துரைகளை உள்ளடக்கியதே கல்விச் சீரமைப்பு!

## பிரதமர் ஹரிணி அமரசூரிய

கொழும்பு, நவ. 16

புதிய கல்வி மறுசீரமைப்பு தமது யோசனை அல்ல என்றும் 200க்கும் அதிகமான நிபுணர்களைக் கொண்ட சபையின் யோசனை என்றும் கல்வி,உயர் கல்வி அமைச்சரான பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

புதிய கல்வி மறு சீரமைப்பு தொடர்பில் துறை சார்ந்த அதிகாரிகளுக்கு விளக்கமளிக்கும் போதே பிரதமர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கமானது குறுகிய கால பயன்கள் அன்றி நீண்ட கால பிரதிபலனைக் கொண்ட கல்வி முறையையே நடைமுறைப்படுத்த தீர்மானித்துள்ளது. பாடவிதான பரிந்துரைகளை மாற்றுவது மட்டுமின்றி முழுமையான கல்வியிலும் சிறந்த முன்னேற்றத்தைக் கொண்டு வரும் கல்வி மறுசீரமைப்பாகவே இந்த கல்வி மறுசீரமைப்பு அமையும். இதன் பிரதிபலன்கள் குறுகிய காலத்துக்குள் அன்றி பத்து வருட காலத்திற்குள் எதிர்பார்க்கப்படுவதாகும்.கடந்த அரசாங்க காலங்களில் திட்டமிடப்பட்ட மறுசீரமைப்பின் நீடிப்பு அல்லாமல், தற்போதைய அரசாங்கம், கல்வியின் காரணமாக மக்களுக்கு இழக்கப்பட்டதை மீண்டும் பெற்றுக் கொடுக்கும் வகையிலேயே இந்த மறு சீரமைப்பை முன்னெடுக்கவுள்ளது-என்றார். (அ)

# துப்பாக்கியுடன் வர்த்தகர் கைது!

கொழும்பு, நவ. 18

நீர்கொழும்பு, குரானாவில் பகுதியில் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் 44 வயதுடைய வர்த்தகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேகநபரான வர்த்தகர் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டார்.

சுமார் ஆறு அங்குல நீளமுள்ள அந்த துப்பாக்கி பெல்ஜியத்தில் தயாரிக்கப்பட்ட பிரவுனிங் வகை துப்பாக்கி என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

குரானாவில் பகுதியில் மோட்டார் வாகன உதிரிப்பாகங்களை விற்பனை செய்யும் குறித்த வர்த்தகரின் வீட்டை சுற்றிவளைத்த பொலிஸார், அறை ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த துப்பாக்கியை கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட வர்த்தகரிடம் இந்த விடயம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும்போது, இந்த துப்பாக்கியை மறைந்த தனது தந்தை கொடுத்ததாக அவர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். (அ)

# வன்முறை மூலம் ஆட்சி அதிகாரம் பெறும் எண்ணம் எம்மிடம் இல்லை!

## தேர்தல் வரை காத்திருப்போம் என்கிறார் உதய கம்மன்பில



கொழும்பு, நவ. 18

திசைகாட்டியுடன் எம்மை ஒருபோதும் ஒப்பிடவேண்டாம். 1977, 1987 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் வன்முறையின் ஊடாக ஆட்சி அதிகாரத்தை பெற்றதை போன்றதொரு எண்ணம் எம்மிடம் இல்லை. தேர்தல் இடம்பெறும் வரை காத்திருப்போம். எதிர்வரும் 21ஆம் திகதி நுகேகொடையில் அதிக தலைகளை காண முடியும் என்ற நம்பிக்கையுள்ளது என முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சமூக வலைத்தளம் மற்றும் ஊடகங்களினூடாக எம்மை கடுமையாக சாடியமைக்கு அரசாங்கத்துக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். எம்மை பிரபலமாக்கியுள்ளனர்.

தற்போதைய அரசாங்கத்துக்கு எதிராக இடம்பெற உள்ள முதலாவது பேரணி எதிர்வரும் 21ஆம் திகதி நுகேகொடை பகுதியில் இடம்பெற உள்ளது என்பதை அறிந்துள்ளனர். இந்த பேரணி தொடர்பில் பிரசாரம் மேற்கொள்ள அரசாங்கத்திடம் உள்ள பணத்தை போல எம்மிடம் பணமில்லை.

அரசாங்கத்துக்கு இன்னும் 4 வருடங்கள் உள்ளன. அந்த காலப்பகுதியில் அரசாங்கம் பொதுமக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு வலியுறுத்தியே பேரணியில் ஈடுபட உள்ளோம். அரசாங்கம் அளித்த வாக்குறுதிகளை மீள நினைவூட்டுவதில் உள்ள தவறு என்ன? அடக்குமுறையையும், ஊழலையும் விரைவில் முடிவுக்கு கொண்டு வருமாறு அரசாங்கத்தை வலியுறுத்துவது தவறா? அரசாங்கத்தை வழிப்படுத்தவே எதிர்பார்த்துள்ளோம், மாறாக அரசாங்கத்தை வீழ்த்துவது எமது எண்ணம்மல்ல-என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கடல் கொந்தளிப்பு மற்றும் காற்றால் கல்முனையில் இயந்திர படகுகள் சேதம்

## ஒலுவில் துறைமுகம் மூடிக்கிடப்பதே அவலத்துக்கு காரணம் என குற்றச்சாட்டு

கல்முனை, நவ. 18

சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட கடல் கொந்தளிப்பு மற்றும் காற்றால் கல்முனை கடற் பிராந்தியத்தில் பல இயந்திரப் படகுகள் சேதமடைந்திருப்பதாக மீனவர் சமூகப் பிரதிநிதி அஸ்வர் அப்துர் சலாம் தெரிவித்தார்.

ஒலுவில் துறைமுகம் செயல்பாடின்றி மூடிக் கிடப்பதே இந்த அவல நிலைக்கு காரணம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



சீரற்ற காலநிலை காரணமாக காற்றினால் அடித்துச் செல்லப்பட்டு, சாய்ந்தமருது பிரதேசத்தில் கரையொதுங்கிய படகு ஒன்று மீட்கப்பட்ட நிலையில், அங்கிருந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

காலத்துக்கு காலம் சீரற்ற காலநிலை காரணமாக ஏற்படுகின்ற கடல் கொந்தளிப்பிலும் காற்றிலும் சிக்குண்டு பெறுமதியான இயந்திரப் படகுகள் சேதமடைந்து வருகின்றன. தற்போது காற்றில் அடித்து செல்லப்பட்டு சேதமடைந்துள்ள இந்த இயந்திரப் படகானது சுமார் ஒன்றரைக் கோடி ரூபாய் பெறுமதியானதாகும்.

அம்பாறை மாவட்டத்தில் சுமார் 300 இயந்திரப் படகுகள் ஆழ்கடல் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றன. ஆனால் இவற்றை கடலில் பாதுகாப்பாக தரித்து வைப்பதற்கென ஒரு மீன்பிடித் துறைமுகமோ படகுத் தரிப்புத் துறையோ கிடையாது.

இதனாலேயே இந்த இயந்திரப் படகுகள் பாதுகாப்பற்ற முறையில் கடலில் அங்கும் இங்குமாக நங்கூரமிடப்பட்டு, நிறுத்தி வைக்கப்படுகின்றன.

ஒலுவில் துறைமுகம் கடந்த 10 வருடங்களாக மூடிக் கிடக்கின்றது. இதனால்தான் மீனவர் சமூகத்தினருக்கு இந்த அவல நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக பாரிய நஷ்டங்களுக்கும் கஷ்டங்களுக்கும் படகு உரிமையாளர்கள் முகம் கொடுத்து வருகின்றனர். இதனால் மீனவர்களின் வாழ்வாதாரமும் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றது.

எனவே, ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க இந்த விடயத்தில் நேரடியாகத் தலையிட்டு, இப்பிராந்திய மீனவர் சமூகத்தின் நீண்ட கால பிரச்னைக்கு தீர்வு வழங்கி, அவர்களது கண்ணீரை துடைக்க முன்வர வேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறோம்- என்றார். (எ)



# சாரணத்தலைவர்களுக்கான பயிற்சி நெறி

மட்டக்களப்பு, நவ. 18

இலங்கை சாரணர் சங்கத்தின் பிரதம ஆணையாளரின் வழிகாட்டலின் கீழ் தேசிய பயிற்சிக் பிரிவின் ஏற்பாட்டில் சாரணத்தலைவர்களுக்கான பயிற்சி நெறி மட்டக்களப்பு மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

வினைத்திறன் மிக்க தலைமைத்துவத்துக்காக எம்மை நாம் மேம்படுத்திக் கொள்வோம் எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கிழக்கு மாகாணம் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிருந்து தருச்சின்னம் பயிற்சியை நிறைவு செய்த மாவட்ட ஆணையாளர்கள், உதவி மாவட்ட ஆணையாளர்கள், சாரணத்தலைவர்கள் என நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இலங்கை சாரணர் சங்கத்தின் தலைமைப் பயிற்சி ஆணையாளர், முன்னாள் பயிற்சி ஆணையாளர், தலைமையகத்தின் பிரதி, உதவி ஆணையாளர்கள் வளவாளர்களாக கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கினர். (எ)

# கடும் மழையுடனான வானிலை நீடிப்பு சாரதிகளே அவதானத்துடன் செயல்படுக

மட்டக்களப்பு, நவ. 18

மட்டக்களப்பில் கடும் மழையுடனான வானிலை நிலவுவதன் காரணமாக வாகனச் சாரதிகளை அவதானத்துடன் செயல்படுமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செட்டிப்பாளையத்தில் வாகனம் ஒன்று வீட்டு மதிலை உடைத்துக் கொண்டு சென்று விபத்துக்குள்ளாகியுள்ளது. இதனையடுத்தே மேற்கண்டவாறு அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன. (எ)

# ஆரையம்பதி பகுதியில் விபத்தில் ஒருவர் பலி!

கல்முனை, நவ. 18

கல்முனை - மட்டக்களப்பு வீதி, ஆரையம்பதி பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

மட்டக்களப்பிலிருந்து கல்முனை நோக்கிச் சென்ற லொறி, பாதசாரி மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்த பாதசாரி, சிகிச்சைக்காக மட்டக்களப்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போது சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் அடையாளம் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை எனவும் மேலும் அவர் அந்தப் பகுதியில் உள்ள யாசகர் என்பது தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பாக லொறி சாரதி கைது செய்யப்பட்டு, மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மேலும், இந்தச் சம்பவம் குறித்து காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# குருக்கள்மடம் ஐயப்ப சுவாமி ஆலயத்தில் புனித மாலை அணியும் விரதம் ஆரம்பம்



மட்டக்களப்பு, நவ. 18

மட்டக்களப்பு மாவட்டம் குருக்கள்மடம் சிறீ ஐயப்பன் தேவஸ்தானத்தில் புனித மாலை அணியும் நிகழ்வு நேற்றுத் திங்கட்கிழமை காலை பக்தி பூர்வமாக நடைபெற்றது.

அதிகாலை இடம்பெற்ற கணபதி ஹோமத்தை தொடர்ந்து, விசேட அபிசேக ஆராதனை நடைபெற்று, வசந்த மண்டப பூஜை நடைபெற்று பின்னர், ஐயப்ப சுவாமி புனித விரதமாலை அணியும் நிகழ்வு நடைபெற்றது.

48 நாட்கள் விரதத்தின் கலியுக வரதன், ஹரிகரசுதன் ஐயப்ப சுவாமியின் அருள் வேண்டி பல நூற்றுக்கணக்கான பக்தர்களும் சுவாமிமார்களும் இதன்போது கலந்து கொண்டனர்.

இவ்விரதப்பூஜை வழிபாடுகள் யாவும் விஸ்வபிரம்ம சிறீ சுபேஸ்வரன் குருசுவாமி தலைமையிலான குழுவினரால் நிகழ்த்தப்பட்டன.

இதன்போது குருசுவாமியால் விரதம் அனுஷ்டிக்கும் சுவாமிகளுக்கு புனிதமாலை அணிவிக்கப்பட்டது. (எ)

# மட்டு. நகரில் ஹோட்டலில் தங்கியிருந்த போதை வியாபாரி உட்பட 3 பேர் கைது!

## ஐஸ் போதைப்பொருள் பறிமுதல்

மட்டக்களப்பு, நவ. 18

மட்டக்களப்பு நகரில் ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த முறக்கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த பிரதான வியாபாரி உட்பட 3 பேரை கைது செய்ததுடன் அவர்களிடமிருந்து 700 கிராம் ஐஸ் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டதாக மட்டு. தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதி காரிபிரியந்த பண்டார தெரிவித்தார்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரியந்த பண்டாரவின் வழிகாட்டலில் ஊழல் மற்றும் போதை ஒழிப்பு பிரிவு பொலிஸார் நகரிலுள்ள அம்மன் கோவில் வீதியில் உள்ள ஹோட்டல் ஒன்றை முற்றுகையிட்டனர்.

இதன்போது ஹோட்டல் அறையில் தங்கியிருந்து போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த பிரதான வியாபாரியான முறக்கொட்டாஞ்சேனை காளி கோவில் வீதியைச் சேர்ந்த நபரை ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்தனர். அவருடன் இருந்த இன்னொரு வியாபாரியான சித்தாண்டி 2ஆம் பிரிவைச் சேர்ந்த நபரையும் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்தனர்.

இதில் கைது செய்யப்பட்டவர்களிடம் மேற்கொண்ட விசாரணையில் சித்தாண்டி பெற்றோல் நிரப்பு நிலையத்துக்கு அருகில் சித்தாண்டி 2ஆம் பிரிவைச் சேர்ந்த போதைப் பொருள் வியாபாரியை ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட 3 பேரையும் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்வதற்கு நீதிமன்ற அனுமதியை பெறும் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# கிண்ணியாவில் ஆணின் சடலம் மீட்பு

கிண்ணியா, நவ. 18

திருகோணமலை, கிண்ணியா தோனா கடலூர் முருகன் கோவிலுக்கு அருகாமையில் உள்ள கடை ஒன்றின் முன்னால் ஆண் ஒருவரின் சடலத்தை நேற்று முன்தினம் காலை கிண்ணியா பொலிஸார் மீட்டனர்.

அருகில் செயற்கை கால் ஒன்றை கழட்டி வைத்தவாறு, வர் உயிரிழந்தார். அவர் ஊன்றிச் செல்லும் கை தாவல் ஒன்றும் சடலம் காணப்படும் இடத்திலிருந்து சுமார் 20 மீற்றர் தூரத்தில் காணப்பட்டது.

இரவு இவர் இறந்திருக்கலாம் என பொலிஸார் தெரிவித்தனர்.

காலையில் சடலத்தை கண்ட கிண்ணியா பொதுமக்கள் சிலர் பொலிஸாருக்கு தெரிவித்தனர். இதனையடுத்து பொலிஸார் அங்கு சென்று சடலத்தை மீட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# காட்டு யானை அட்டகாசம்

திருகோணமலை, நவ. 18

திருகோணமலை மாவட்டம் தம்பலகாமம் பிரதேச செயலக பிரிவில் உள்ள கல்மெடியாவ தெற்கு பகுதியில் ஊருக்குள் புகுந்த காட்டு யானை வீட்டை சேதப்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

இரவு நேரத்தில் ஊருக்குள் புகுந்த காட்டு யானை வீட்டின் ஜன்னல் பகுதியை துவம்சம் செய்துள்ளது.

குறித்த பகுதியில் பாதுகாப்பான யானை வேலியின்மை காரணமாக காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது.

குறித்த சேத விவரம் தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி...

ஒப்பமிட்டு அனுப்பி வைத்த கோரிக்கைக் கடிதத்தின் அடிப்படையில் இந்தச் சந்திப்புக்கு ஜனாதிபதி செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சந்திப்புக்கான தினத்தையும், நேரத்தையும் ஜனாதிபதி செயலகம் நேற்று தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரனைத் தொடர்புகொண்டு அறிவித்துள்ளது.

தமிழரசுக் கட்சியின் சார்பில் அதன் தலைவர், பொதுச் செயலாளரோடு கட்சியின் எட்டு பாராளுமன்ற உறுப்பினர்களும் நாளைமறுதினம் நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பில் பங்குபற்றவுள்ளனர்.

இனப் பிரச்னைக்குத் தீர்வு, மாகாண சபைத் தேர்தல், 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துதல் மற்றும் திருகோணமலை கடற்கரையில் அமைக்கப்பட்டு வரும் பௌத்த வணக்கஸ்தலம் மற்றும் அங்கு அடாத்தாக நிறுவப்பட்ட புத்தர் சிலை ஆகியவை உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து தமிழரசுக் கட்சியினர் இந்தச் சந்திப்பில் ஜனாதிபதியிடம் வலியுறுத்துவார்கள் என்று தெரிகின்றது. (அ)

## உயிரிழந்தோர்...

அவ்வாறுதான். உயிரிழந்தவர்களை நினைவு கூருவதற்குரிய உரிமை மக்களுக்கு உள்ளது. எனினும், அந்த உரிமை என்பது விடுதலைப் புலிகளை நினைவு கூருவதற்கானது அல்ல என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எமது அரசாங்கம் ஆட்சியில் இருந்தாலும் பொது இடங்களில் ஜே.வி.பி. மாவீரர்களுக்கு நினைவிடம் அமைக்கவில்லை. அவர்களுக்கான நினைவுத்தூபி எம் மனங்களில் இருந்தால் போதும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துடன் பேச்சு நடத்தி பிரச்னைக்கு தீர்வை காணலாம் என்ற எதிர்பார்ப்பு இருப்பதாலேயே வரவு- செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களிக்காமல் இலங்கை தமிழரசுக் கட்சி விலகி இருந்ததாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

அரசாங்கத்தை விமர்சிப்பதற்கு புதிய ஆயுதங்களை எதிரணிகள் உருவாக்கிக்கொள்ளவேண்டும். நாங்கள் உங்கள் மீது முன்வைத்த விமர்சனக் கணைகளையே எம்மை நோக்கி மீள செலுத்தவேண்டாம். புதிய ஆயுதம் என்பது, எம்மைவிட சிறந்த திட்டங்கள் அவசியம் என்பதாகும்.

எமது அரசியல் கொள்கை எவ்வளவு வலுவானது என்றால், மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நான்கு தலைவர்கள் வரவு- செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். இந்நிலையில், தேசிய சமத்துவத்துக்காக நாம் முழு அர்ப்பணிப்புடன் செயல்படுவோம் என அமைச்சர் பிமல் ரத்நாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (அ)

## 31 இந்திய...

பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில், விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் குறித்த வழக்கு நேற்று திங்கட்கிழமை பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டவேளை, தம் மீதான குற்றச்சாட்டுகளை தமிழக கடற்தொழிலாளர்கள் ஏற்றுக்கொண்டனர்.

அதனை அடுத்து இலங்கை கடற்பரப்பினுள் படகை செலுத்திய குற்றச்சாட்டு உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களுக்கு படகோட்டிகள் மூவருக்கும் 19 மாதச் சிறை தண்டனை விதிக்கப்பட்டு அதனை 10 வருடங்களுக்கு ஒத்திவைத்தது மன்று. அத்துடன் படகில் இருந்த 28 கடற்தொழிலாளர்களுக்கும் 18 மாத சிறைத்தண்டனை விதித்து அதனை 10 வருடங்களுக்கு நீதிமன்று ஒத்திவைத்தது.

அத்துடன் படகின் உரிமையாளர்களுக்கு படகு தொடர்பிலான வழக்கு விசாரணைக்காக எதிர்வரும் மே மாதம் மன்றில் முன்னிலையாகுமாறு அழைப்பு கட்டளை அனுப்பப்பட்டுள்ளது. (அ-2-5)

## பாதாள உலக...

தொடர்புடைய பாடசாலை அதிபர்களும்கூட போதைப் பொருள் விநியோக நடவடிக்கைளில் ஈடுபடுகின்றனர். ஆகவே அரசியல் ரீதியாக நெருக்கமானவர்களைக் கைது செய்யும் நடவடிக்கையும் கூட தடுக்கப்படுகிறது.

நாட்டின் இளைஞர்களை போதைப்பொருட்களிலிருந்து காப்பாற்ற, பொலிஸ் மா அதிபர் மக்கள் விடுதலை முன்னணியினருக்கு ஏற்ற வகையில் செயல்படாமல், பாரபட்சமின்றி சட்டம் அமுல்படுத்தப்படவேண்டும் .

விளையாட்டு, கலாசாரம் மற்றும் கலையை ஊக்குவிப்பதன் மூலம் இளைஞர்களை போதைப்பொருட்களிலிருந்து விலக்கி வைக்க எமது கட்சி வரலாற்று ரீதியாக பல நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தது. எதிர்க்கட்சி விரைவில் தங்கள் கடமையையும் பொறுப்பையும் தொடங்க உள்ளது -என்றார். (அ)

## திருகோணமலை...

திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் தொடர்பில் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது-

திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் குறித்து உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இந்த நாட்டில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு என்று பிறிதொரு சட்டம் கிடையாது. அதேபோல் பௌத்த துறவிகளுக்கு என்றும் பிறிதொரு சட்டம் கிடையாது. அனைவரும் பொதுச்சட்டத்துக்கு கட்டுப்பட வேண்டும்.

இனவாதம, வெறுப்பு பேச்சுகளுக்கு இடமளிக்க முடியாது. வடக்கு , தெற்கு, கிழக்கு என்று வேறுபாடின்றி அனைத்து இன மக்களையும் நாங்கள் ஒருமித்தே பார்க்கிறோம். அனைவரும் சமமாக நடத்தப்படுவார்கள்.

வழக்குத் தொடுநர் அலுவலகம் பற்றி கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குறிப்பிட்ட ஒருசில விடயங்களை ஏற்றுக்கொள்கிறோம். இந்த அலுவலகம் இந்த நாட்டில் இடம்பெற்ற சகல குற்றங்கள் குறித்தும் ஆராயும். இந்த அலுவலகத்தின் செயற்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி விரிவாக கலந்துரையாடலாம்-என்றார். (அ)

## ஷேக் ஹசீனா...

அந்நாட்டின் சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் நேற்று மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

78 வயதான தலைமறைவு அரசியல்வாதியான ஷேக் ஹசீனா, கடந்த ஆண்டு நடந்த போராட்டங்களை ஒடுக்கியதில் "சூத்திரதாரி மற்றும் முக்கியக் கருவியாக" இருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டார்.

கடந்த ஆண்டு ஜூலை 15 முதல் ஓகஸ்ட் 5, வரை நடந்த இந்த மக்கள் போராட்டங்கள் ஒடுக்கியதில், சுமார் 1,400 பேர் வரை கொல்லப்பட்டனர் என்றும் ஆயிரக்கணக்கானோர் காயமடைந்தனர் என்றும் ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை தெரிவிக்கிறது.

அதிகாரத்தை இழந்ததிலிருந்து இந்தியாவில் தலைமறைவாக இருக்கும் ஷேக் ஹசீனா, நீதிமன்ற உத்தரவுகளை மீறி விசாரணைக்கு முன்னிலையாகாததால், அவர் தலைமறைவாக இருக்கும் நிலையிலேயே இந்த விசாரணை நடத்தப்பட்டுத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. தீர்ப்பையொட்டி பங்களாதேஷ் முழுவதும் பதற்றம் நிலவுவதாகவும், பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## ஆளுங்கட்சி...

அவர் இட்டுள்ள பதிவு வருமாறு-

அமைச்சர் ஆனந்த விஜயபாலவும் தேசிய மக்கள் சக்தி அரசும் பேரினவாத சக்திகளின் அழுத்தங்களுக்கு கோழைத்தனமாக அடிபணிவதை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி கேவலமாகக் காண்கிறது. நேற்றிரவு அமைச்சரின் கட்டளைப்படி திருகோணமலை கடற்கரையில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட சிலை பொலிஸாரினால் அகற்றப்பட்டபோது, அரசாங்கம் இனவாத எண்ணமில்லாமல் சரியாக நடந்து கொள்கிறது என்று சிலர் நினைத்தார்கள்.

ஆனால், அப்படியல்ல என்பதை சில மணி நேரத்துக்குள்ளேயே அமைச்சர் பாராளுமன்றத்தில் வெளிப்படுத்தினார். பாதுகாப்புக்காகவே சிலை அகற்றப்பட்டதாகவும் அது இன்று மீள நிறுவப்படும் என்றும் வெட்கமில்லாமல் அறிவித்தபோதே சகல மக்களும் சமத்துவமாக நடத்தப்படுவார்கள் என்ற வாக்குறுதி காற்றில் பறக்க விடப்பட்டது.

தேசிய மக்கள் சக்தி அரசும் முன்னைய அரசுகளைப் போலவே ஒரு இனவாத, சிங்கள பௌத்த பேரினவாத அரசு என்பதை நிறுவியுள்ளது. இக் கட்சியைச் சேர்ந்த திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அருண் ஹேமச்சந்திரா உட்பட அனைத்து தமிழ் உறுப்பினர்களும் உடனடியாக இராஜிநாமா செய்ய வேண்டும்."-என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## நம்பி வாக்களித்த...

நேற்றிரவு அகற்றியபோது , சாதாரண சிங்கள மக்கள் அதை எதிர்க்கவில்லை. ஏனெனில், இனவாதத்தையும் மதவாதத்தையும் நீக்குவதாக நீங்கள் சொன்னதை நம்பி அவர்கள் உங்களுக்கே வாக்களித்திருந்தார்கள்.

இங்கிருக்கும் திருமலைக்கான தமிழ் பாராளுமன்ற உறுப்பினரையும் அவர்கள் தெரிவு செய்திருந்தார்கள்.

நீங்கள் நேற்றிரவு (நேற்று முன் தினம் இரவு) எடுத்த நடவடிக்கையை எதிர்த்ததெல்லாம், சிங்கள காடையர்கள் மட்டுமே. அந்த இனவாத மதவாத காடைத்தனத்தை கண்டு நீங்கள் பின்வாங்கியிருந்திருக்கக்கூடாது.

உண்மையில் நீங்கள் என்ன செய்திருக்கவேண்டுமெனில் , மக்களிடம் சென்று எது சரி எது பிழை என்பதை, எப்படியான் அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது என்பதை நேர்மையுடன் சொல்லியிருந்திருக்க வேண்டும். ஆனால், அதற்கு பதிலாக நீங்கள் இப்போது செய்ததெல்லாம்,

நீங்கள் (இனவாதிகள் இல்லை என) சொன்னதை நம்பி உங்களுக்கு வாக்களித்த தமிழ் மக்களுக்கும் உங்களுக்கு வாக்களித்த சிங்களரல்லாத வாக்களருக்கும் முழுமையான தூரோகத்தை இழைத்திருக்கிறீர்கள்-என்றார்.

## புத்தர் சிலை...

இந்தக் கோயில், வழிபாட் டுத் தலமாக சட்டபூர்வ அந்தஸ்தைக் கொண்டுள்ளது என்று அவர் சுட்டிக் காட்டினார்.

புத்தர் சிலைகளை வைப்பது மற்றும் அறப்பள்ளி கட்டடங்களை நிர்மாணிப்பது தொடர்பாக உத்தரவுகளைப் பிறப்பித்தமைக்காகப் பொலிஸாருக்கு அவர் கண்டனம் தெரிவித்தார். இதுபோன்ற செயல்கள் வகுப்புவாத பதற்றங்களைத் தூண்டக்கூடும் என்றும் அவர் எச்சரித்தார்.

இந்த விவகாரம் தொடர்பாக ஏதேனும் பிரச்னை இருந்தால், பௌத்த பிரிவுகளின் மூன்று தலைமைப் பீடாதிபதிகளுடன் பேச்சு மூலம் அதைத் தீர்க்க வேண்டும். வளர்ச்சி நடவடிக்கைகளைச் சீர்குலைக்கப் பொலிஸாரை அனுப்புவது ஏற்றுக்கொள்ள முடியாதது.

மேலும் அத்தகைய உத்தரவுகள் யாருடைய அதிகாரத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்டன? அரசு நாட்டின் உச்ச சட்டமான அரசமைப்பைப் புரிந்துகொள்ளவில்லை என்றால், அதை மீண்டும் படிக்க வேண்டும் -என குறிப்பிட்டுள்ளார். (அ)

## அகற்றப்பட்ட...

அதே இடத்தில் வைக்கப்பட்டது.

சட்ட அனுமதி இன்றி நேற்று முன் தினம் இரவு 8 மணியளவில் இந்த புத்தர் சிலை இந்த இடத் தில் வைக்கப்பட்டது. எனினும், இரவு 11 மணி யளவில் துறைமுகப் பொலிஸார், திருகோண மலை பொலிஸ் அத்தி யட்சகர் தலைமையில் வந்து பௌத்த பிக்குகளின் பெரும் எதிர்ப்புக்கு மத்தியில் புத்தர் சிலையை அங்கிருந்து அகற்றினர்.

பின்னர் இந்தப் புத்தர் சிலை துறைமுகப் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு நேற்று நண்பகல் வரை அங்கு வைக்கப்பட்டிருந்தது.

கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர மூலவளங்கள் முகாமைத்துவ திணைக்களம், பௌத்த பிக்குமார், பொலிஸார், பாராளுமன்ற உறுப்பினர் றொஷான் அக்மீமன, திருகோணமலை மாவட்ட அரச அதிபர் ஆகியோர் கலந்துகொண்ட விசேட கூட்டம் திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் வழங்கியிருந்த அறிவுறுத்தலின் அடிப்படையில் மீளவும் புத்தர் சிலை, அகற்றப்பட்ட அதே இடத்தில் வைக்கப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டு இதன்படி சிலை மீள வைக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க திருகோணமலை கடற்கரையில் மாநகர சபைக்குச் சொந்தமான பகுதியில் முன் அனுமதியின்றி சட்டவிரோதமாக அமைக்கப்பட்டு வரும் பௌத்த வணக்கஸ்தலத்தில் அடாத்தாக புத்தர் சிலை வைக்கப்பட்டமைக்கு எதிராகவும், இது அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் எனத் தெரிவித்தும் திருகோணமலை மாநகர சபையின் மேயர் க.செல்வராஜா, துறைமுகப் பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு செய்துள்ளார். (அ)

## ஹசீஸ்...

பயிலும் ஊவா பரணகம பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர் ஒருவரே யாழ்.கந்தர்மடம் பகுதியில் இவ்வாறு கைது செய்யப்பட்டார்

24 வயதுடைய மேற்படி மாணவனிடம் இருந்து 33 கிராம் 230 மில்லி கிராம் ஹசீஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

மேற்படி சந்தேக நபரை நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தியவேளை எதிர்வரும் 30 திகதிவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. (அ)

## வடக்கில்...

தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

கிழக்கு மாகாணத்தில் இன்று இரவு முதல் படிப்படியாக மழை குறைவடையும். மத்திய, மேற்கு மற்றும் வடமேல் மாகாணங்களுக்கு தற்போது கிடைக்கும் மழை நாளை வரை தொடரும்.

மீண்டும் எதிர்வரும் 23.11.2025 முதல் கிடைக்கவிருக்கும் கன மழையை எதிர்கொள்ள தயாராகுவோம். குறிப்பாக எதிர்வரும் 24.11.2025 மற்றும் 25.11.2025 ஆகிய நாட்களில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட நாட்டின் பல பகுதிகளுக்கும் மிகக் கனமழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

இந்த மழை ஒரு புயல் அல்லது ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலத்தோடு தொடர்புடைய மழை என்பதனால் மிக வேகமான காற்று வீசுகையோடு தொடர்புடைய மழையாக அது இருக்கும். இதனால், சமுத்திரப் பகுதிகளின் நீர் மட்டம் உயர்வாக இருக்கும் என்பதனால் கிடைக்கும் மழைநீர் இயற்கையான ஈர்ப்பு விசை செல்வாக்கினால் கடலைச் சென்றடைய மிக தாமதமாகும்.

எதிர்வரும் 24 மற்றும் 25 ஆம் திகதிகளில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கன மழை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது -என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழிவிலிருந்து மின்சார உற்பத்தி திட்டத்தை நிறுவுவதற்கு உதவி!

**கொரிய தூதுவரிடம் கோரினார் வடக்கு ஆளுநர்**

யாழ்ப்பாணம், நவ. 18

**வடக்கு மாகாணத்தில் நீடித்து வரும் திண்மக் கழிவகற்றல் பிரச்னைக்குத் தீர்வு காணும் நோக்கில் "கழிவிலிருந்து மின்சார உற்பத்தி" திட்டத்தை நிறுவுவதற்கான உதவியை இலங்கைக்கான கொரியக் குடியரசுத் தூதுவர் லீ மியோனிடம் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் முன்வைத்துள்ளார்.**



நேற்று திங்கட்கிழமை காலை ஆளுநர் செயலகத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பில், கொரியத் தூதுவர் தலைமையிலான குழுவினர் பங்கேற்றனர்.

திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவத்துக்கான திட்டம் ஒன்றை இலங்கையில் நடைமுறைப்படுத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், இதற்காக நிதி அமைச்சு, சுற்றாடல் அமைச்சு மற்றும் பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சு ஆகியவற்றுடன் கலந்துரையாடல்கள் நடைபெற்றுள்ளதாகவும் கொரியத் தூதுவர் தெரிவித்தார். வடக்கு மாகாணத்திலும் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்பதை ஆளுநர் வரவேற்றதோடு, மாகாணத்தின் உளளூராட்சி மன்றங்கள் திண்மக் கழிவகற்றலில் எதிர்கொள்ளும் சவால்களை அவர் சுட்டிக்காட்டினார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சுற்றுச்சூழல் சமநிலை மேம்பாட்டை நோக்கமாகக் கொண்ட மங்கு ரோவ் நடுகை ஊக்குவிப்பு திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தும் யோசனையையும் தூதுவர் முன்வைத்தார்.

மேலும், கொரியாவின் சர்வதேச சுகாதார அறக்கட்டளை ஊடாக இலங்கையில் 11 சுகாதாரத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும், அதனுள் வடக்கு மாகாணமும் இடம்பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரிக்காக கொய்கா திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட கட்டட வசதிகளுக்காக ஆளுநர் நன்றியைத் தெரிவித்தார். தற்போதைய தேவைகளுக்கேற்ப தொழில்நுட்ப உபகரணங்களின் பற்றாக்குறை மற்றும் கட்டட மேம்பாட்டு தேவைகளைவும் அவர் சுட்டிக்காட்டினார். கொய்கா திட்டம் தற்போது நிறைவடைந்துள்ள நிலையிலும் இவற்றை கவனத்தில் கொள்ளுவதாக தூதுவர் உறுதியளித்தார்.

கொரியா தொழிற்துறை மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் உலகளவில் முன்னேற்றத்தைப் பதிவுசெய்துள்ளதாக ஆளுநர் குறிப்பிட்டதோடு, வடக்கு மாகாண இளையோருக்கான தொழில்துறை வேலை வாய்ப்புகள் மற்றும் பயிற்சிகளை அறிமுகப்படுத்துவதற்கான முதலீடுகளை ஊக்குவிக்குமாறு அவர் கோரினார்.

மேலும், கொரிய மொழிப் பயிற்சி மையம் அல்லது மொழிப் பயிற்சி வகுப்புகளைத் தொடங்குவதற்கான உதவியையும் அவர் கேட்டுக்கொண்டார்.

கொரியாவில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்ட பச்சை வீட்டு விவசாயம் மற்றும் நுண்ணறிவு பாசன முறைகள் பற்றியும் ஆளுநர் கூறி, வடக்கு மாகாணத்தில் ஒரு கிராமத்தைத் தெரிவு செய்து இத்திட்டங்களைப் பரீட்சார்த்தமாக அறிமுகப்படுத்துவதற்கான ஒத்துழைப்பைத் தூதுவரிடம் கோரினார்.

வடக்கு மாகாண விவசாயிகள் கடின உழைப்பாளர்களாக இருந்தாலும், பாரம்பரிய முறைகளால் உற்பத்தி செலவு-அதிகரித்து விளைச்சல் குறைந்து வருவதாக அவர் எடுத்துக்காட்டினார்.

இத்திட்டங்கள் அறிமுகமானால் குறைந்த செலவில் அதிக உற்பத்தி பெற முடியும் என ஆளுநர் வலியுறுத்தினார். இதனைத் தூதுவர் சாதகமாக ஆராய்வதாகத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் ஆளுநரின் செயலாளர் மற்றும் இணைப்புச் செயலாளர்கள் கலந்துகொண்டனர். (அ)

---

ஈழநாடு
Eelanadu

# நுகேகொடை பேரணி அரசுக்கு கடும் சவால்!

**கூறுகிறார் சாகர காரியவசம்**



கொழும்பு, நவ. 18

அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்தில் சகல அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்துள்ளமை அரசாங்கத்துக்கு பாரியதொரு சவாலாக அமையும். மாகாண சபைத் தேர்தலில் ஒன்றிணைந்து செயற்படுவது குறித்து ஆராய்வோம் என பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நடைபெற்ற தொகுதி அமைப்பாளர்களுடனான சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்வரும் வெள்ளிக்கிழமை கொழும்பில் இடம்பெறவுள்ள அரசாங்கத்துக்கு எதிரான பேரணி அரசாங்கத்துக்கு பெரியதொரு சவாலாக அமையும். அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாடுகளை சுட்டிக்காட்டி இந்த பேரணியை நாங்கள் ஏற்பாடு செய்துள்ளோம்.

இந்த பேரணியில் சகல எதிர்க்கட்சிகளும் ஒன்றிணையும். போலியான வாக்குறுதிகளை குறிப்பிட்டு மக்களை ஏமாற்றி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை அரசாங்கம் நிறைவேற்றவேண்டும்.

பாதாளக் குழுக்களை கைது செய்தல், போதைப் பொருட்களை கைப்பற்றல் பிரதான பேசுபொருளாக காணப்படுகிறது. போதைப்பொருள் ஒழிப்புக்கு முன்னுரிமை வழங்குவதாக ஜனாதிபதி குறிப்பிடுகிறார். புதிய திட்டங்களும் அமுல்படுத்தியுள்ளார்.

போதைப்பொருள் மற்றும் பாதாளக் குழுக்களை ஒழிப்பதற்கு அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு நாங்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். ஆனால் இந்த விடயத்தில் ஜனாதிபதியின் உண்மைத் தன்மை சந்தேகத்துக்கிடமாக உள்ளது.

சுங்கத்தில் இருந்து பரிசோதனையின்றி விடுவிக்கப்பட்ட 323 கொள்கலன்கள் பற்றி இதுவரை உண்மை வெளிவரவில்லை. இலங்கைக்கு இரண்டு கொள்கலன்களில் ஐஸ் போதைப்பொருள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சர்வதேச புலனாய்வு சேவை வழங்கிய புலனாய்வுத் தகவலையும் அரசாங்கம் அலட்சியப்படுத்தியது.

அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தே எதிர்வரும் 21 ஆம் திகதி பேரணியில் ஈடுபடவுள்ளோம்-என்றார். (அ)

---

# இறுதிப்போரின் பின் என்னால் இலகுவில் ஆட்சியைக் கைப்பற்றியிருக்க முடியும்!

**சரத் பொன்சேகா கூறுகிறார்**

கொழும்பு, நவ. 18

நான் முன்னாள் இராணுவத் தளபதியாக இருந்தாலும் உண்மையில் நான் ஒரு ஜனநாயகவாதி. நான் எப்போதும் ஜனநாயகத்தின் பிரகாரமே செயற்பட்டு வருகின்றேன் என முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

நான் சர்வாதிகாரியென்றால், இறுதிப்போரின் பின்னர் என்னால் மிக இலகுவாக ஆட்சியைக் கைப்பற்றியிருக்கமுடியும் என்றும் அவர் கூறினார்.

சரத் பொன்சேகா ஒரு சர்வாதிகாரி என்று தென்னிலங்கை அரசியல்வாதிகள் தெரிவித்துள்ள கருத்துக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

என்னைச் சர்வாதிகாரி என்றும், நான் தலைவரானால் சர்வாதிகாரப் போக்கே நிலவும் என்றும் பலர் கூறுகின்றனர். உண்மையில் நான் ஒரு ஜனநாயகவாதி.

நான் சர்வாதிகாரியென்றால், இறுதிப்போரின் பின்னர் என்னால் மிக இலகுவாக ஆட்சியைக் கைப்பற்றியிருக்க முடியும். ஆனால், நான் அவ்வாறு செயற்பட விரும்பவில்லை. ஏனெனில், நான் எப்போதும் ஜனநாயகத்தின் பிரகாரமே செயற்பட்டு வருகின்றேன்.

இராணுவத்தில்கூட சர்வாதிகார உத்தரவுகளை நான் பிறப்பித்ததில்லை. ஆனால், நாடு முன்னேற வேண்டுமெனில் நாட்டை நேசிக்கக்கூடிய சர்வாதிகாரி ஒருவர் அவசியம்.-என்றார். (அ)

---

# இளம் தாயை தீ வைத்து கொன்ற சிறுமி சிறையில்!

கொழும்பு, நவ. 18

பதுளையில் தாயை பெற்றோல் ஊற்றி தீ வைத்து கொலை செய்த மகள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காதலுக்கு எதிர்ப்பு தெரிவித்ததால், சிறுமி ஒருவர் தனது தாய் மீது பெற்றோல் ஊற்றி தீ வைத்துள்ளார்.

பதுளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த தாய் நேற்று முன் தினம் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் உயிரிழந்த பெண், பதுளை, எகொடவெலவைச் சேர்ந்த 28 வயது துலாஞ்சலி குமாரி என்ற பெண் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சிறுமி எகொடவெலவைச் சேர்ந்த 13 வயது மாணவி என தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் கடந்த 4 ஆம் திகதி நடந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

---

# கடலலையில் அள்ளுண்டு சிலாபத்தில் ஒருவர் பலி!

கொழும்பு, நவ. 18

சிலாபம் பகுதியில் கடலலையில் அள்ளுண்டு செல்லப்பட்டு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சிலாபம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிலாபம் கடலில் பெண் ஒருவரும், 8 வயதுச் சிறுவன் ஒருவரும் கடலலையில் அடித்துச் செல்லப்பட்டதை தொடர்ந்து, உள்ளூர் வாசிகளால் அவர்கள் மீட்கப்பட்டு சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதன்போது, குறித்த பெண் உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தவர் தங்கொட்டுவ பகுதியைச் சேர்ந்த 61 வயதுடையவர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சடலம் சிலாபம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சிலாபம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

---

# சபாநாயகர், பிரதி அமைச்சர்களுக்கு வாடகை அடிப்படையில் இல்லங்கள்!

கொழும்பு, நவ. 18

பிரதியமைச்சர்கள் மற்றும் சபாநாயகருக்கு வாடகை அடிப்படையில் 6 உத்தியோகபூர்வ இல்லங்கள் வழங்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரத்தின்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இவ்வாறு வாடகை அடிப்படையில் வழங்க முடியுமாக இருந்தால் கடந்த முறையும் அவ்வாறே வழங்கப்பட்டிருந்தது. எந்தவொரு நபருக்கும் வாடகை அடிப்படையில் வழங்க முடியும். ஆனால் அமைச்சர்களின் உத்தியோகபூர்வ இல்லங்களை பெறப்போவதில்லை என்று அரசாங்கம் தீர்மானித்ததாக கூறினீர்கள். நாட்டிலுள்ள அமைச்சர்கள் பயன்படுத்திய எந்தவொரு உத்தியோகபூர்வ இல்லங்களையும் யாருக்கும் வழங்கப் போவதில்லை என தெரிவித்திருந்தனர். தற்போது சபாநாயகர் உள்ளிட்ட பிரதியமைச்சர்கள் என 6 பேருக்கு வாடகை அடிப்படையில் உத்தியோகபூர்வ இல்லங்கள் வழங்கப்பட்டுள்ளன. அமைச்சர்களுக்கு பயன்படுத்த வேண்டுமெனில் அவர்களுக்காவது வழங்குங்கள். எதிர்க்கட்சியினர் யாராவது சம்பளத்தில் வாடகை அறவிடும் வகையில் கோருவார்களாயின் அவர்களுக்கு வழங்குங்கள். எங்களுக்கும் தாருங்கள். எனக்கு மாதிவெலவில் ஒன்று உள்ளது. எனவே எனக்கு வேண்டாம். நான் அமைச்சர் காலத்திலும் அங்குதான் இருந்தேன். நான் மட்டும்தான் அமைச்சர் காலத்தில் மாதிவெலயில் இருந்தேன். எனவே இந்த வீடுகள் தொடர்பில் வேலைத்திட்டமொன்றைச் செய்றபடுத்துங்கள்-என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 18.11.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org